14th November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : இங்கே வெறும் நிப்புதான் தயார் செய்யப்படுகிறது. பேனு ஹோல்டர்கள் முதலியவை பம்பாயில் அதிகம் இருப்பதால் நிப்புகள் வரவழைக்கப்பட்டு அவற்றோடு பொறுத்தி இங்கே விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை ராஜ்யத்தில் தனியாக நிப்புகளை உபயோகப்படுத்திக்கொள்ள வசதி இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இங்கே தயாரிக்கப்படுகிற யு.எஸ்.ஏ. என்று போடப்பட்டிருக்கும் நிப்புகள் முதல் தரமானவைகளாக இருப்பதால்தான் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதுபோல ஏமாற்றுவதற்காக இம்மாதிரி செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த நிப்புகளே முதல்தரமானதாக இருப்பதால் இனி வெளிநாட்டில் இருந்து தருவிக்கக்கூடிய இம்போர்ட் லைசென்ஸை கட்டுப்படுத்த சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : That is a matter which relates to the Central Government.

SRI V. SANKARAN : இந்த நிப்புகளில் உண்மையான இருடியம் தீட்டப்படாமல், மற்ற ஈயம்போன்ற உலோகங்களை தீட்டப்படுவது வாஸ்தவமா ? 9·30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த உமாசங்கர் ஏஜன்சியிலும், யுனைட் சேல்ஸ் அசோசியேஷனிலும் இந்த நிப்புகள் ஸ்டேயின்லெஸ் ஸ்டீலினால் இருடியம் வைத்து செய்வதற்கு முயற்சிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : நம் மூலதனத்தில் நல்ல நிப்புகள் செய்யும்போது, பார்க்கர் பைலட், வாட்டர்மென்ஸ் முதலிய வெளிநாட்டு கம்பெனிகளுக்கு நிப்புகள் செய்வதற்கு அனுமதி கொடுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது நல்ல நிப்புகள் இங்கேயும் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால் இதைப்பற்றி ஒரு அபிப்பிராயமும் இல்லை. நல்லதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் நிப்புகள் அதிகமாக தேவைபடுவதால் புதிய கம்பெனிகள் வைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : சாத்தூரில் செய்யப்படும் நிப்புகளின்பேரில் யு.எஸ்.ஏ. என்று போட்டிருப்பதனாலே மாகாணத்திலுள்ள ஒரு அரசியல் கட்சி தங்கள் கட்சியை விளம்பரப்படுத்துவதற்காக " உதயசூரியன் அசோசியேஷன் " என்று சொல்வது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : I rule the question out of order.

Old Assembly Buildings at Government Estate

* 165 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) what the Government propose to do with the buildings in the Government Estate which were used for the Assembly from 1952 to 1956; and

(*b*) the total amount that was spent for constructing the Assembly Buildings in the Government Estate?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The question of the future use of the Assembly Building is under consideration.

(*b*) The total amount of expenditure incurred for construction of the Assembly Building is Rs. 9,24,609.